# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

முறையீட்டு மனு எண். 018/ந/2019
நாள் : **23/05/2019**

அனைத்துப்பிரிவு பணியாளர்கள்,
இராஜபாளையம் நகராட்சி,
இராஜபாளையம். — **முறையீட்டு மனுதாரர்கள்**

திரு G. வெங்கடேசன்,
**கணக்கர்,**
**இராஜபாளையம் நகராட்சி,**
**இராஜபாளையம்.** — **எதிர் மனுதாரர்**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சியில் பணி புரியும் பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகப் பணியாளர்களிடமிருந்து பல்வேறு நாட்களில் பெறப்பட்ட மனுக்கள், 18/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட மனுக்களில் இராஜபாளையம் நகராட்சியில் கணக்கராகப் பணிபுரியும் திரு G. வெங்கடேசன் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து திருநெல்வேலி, நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டும் மற்றும் மனுச் செய்த நகராட்சிப் பணியாளர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டும் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகராட்சியில் திரு G. வெங்கடேசன் என்பவர் கணக்கராகப் பணியாற்றி வருகிறார். மாற்றுத்திறனாளியான இவர், மாற்றுத் திறனாளிகள் சங்க மாநில பொறுப்பாளராகவும் உள்ளதால் அதிகாரிகளை மிரட்டுவதுடன், தகவல் ஏதேனும் கேட்டால் பதிலளிப்பது இல்லை என்றும், அம்மா உணவகத்தில் பணிபுரியும் பெண்களிடம் அவதூறாகப் பேசுவது, மிரட்டுவது போன்ற இழிவு செயல்களில் ஈடுபட்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏழை எளிய மக்களின் வயிற்றில் பால் வார்க்கும் அம்மா உணவகப் பணியாளர்களிடம் காம உணர்வோடு நடந்து கொள்ளும் மேற்குறிப்பிட்ட அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டுமென்றும் அப்பணியாளர்கள் முறையிட்டுள்ளனர். சென்னை, பொழிச்சலூர் பகுதியில் வசித்துவரும் பத்திரிக்கை நிருபர் கண்ணன் என்ற வேல் என்பவரும் இவர் மீது ஊழல் குற்றச்சாட்டு தெரிவித்து முறையிட்டிருந்தார். ஆனால்

விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பியதில் மேற்குறிப்பிட்ட நபர் அவர் குறிப்பிட்டுள்ள முகவரியில் இல்லை என அவ்வழைப்பாணை திருப்பபட்டுவிட்டது. இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரியும் திரு க. திருப்பதி, திரு P. முத்துராமலிங்கம், அலுவலக உதவியாளர் திரு மா. சங்கர் மற்றும் வருவாய் அலுவலர் திரு S. வெங்கடேஸ்வரன் ஆகியோரும் மற்றும் சில அலுவலர்களும் கூட்டாக கையொப்பமிட்ட மனு ஒன்றினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்திருந்தனர். மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் சிலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட அனைவரும் CITU சங்க உறுப்பினர்கள் என்றும், விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. வருவாய் அலுவலராகப் பணிபுரியும் திரு S. வெங்கடேஸ்வரன் தன் மீதான புகார் மனு மற்றும் கணக்கர் வெங்கடேஸ்வரன் மீதான புகார்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள நகராமைப்பு அலுவலர் திரு சேதுராஜன் அவர்கள் விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்தார். தனது பிரிவில் பணிபுரியும் திருமதி சுகந்தினி, திரு ராம்குமார், திரு திருப்பதி மற்றும் சிலர் திரு G. வெங்கடேசன் அவர்களால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் திரு S. வெங்கடேஸ்வரன் விசாரணையின் போது தெரிவித்தார்.

3. இராஜபாளையம் நகராட்சியில் பணிபுரியும் மற்றொரு அலுவலரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கணக்கராகப் பணிபுரியும் திரு G. வெங்கடேசன் ஒரு மாற்றுத்திறனாளி. இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களாகப் பணிபுரியும் திருமதி முருகேஸ்வரி, திருமதி சிவபாக்கியம், திருமதி பாக்கியலஷ்மி, திருமதி அனிதா ஆகியோர் மீதும் வெளியில் சொல்லமுடியாத அளவிற்கு கன்னியத்தை குலைக்கும் வகையில் அப்பெண்களை குறித்து ஆணையாளருக்கு தபாலில் ஒரு கடிதம் வந்ததாகவும், வெளிநபர் ஒருவர் அக்கடிதத்திற்குப் பதிலாக புகார் அனுப்பியதாகவும் அந்நபர் தபால் அலுவலகத்தில் கையும் களவுமாக பிடிபட்டதால் தான்தான் புகார் எழுதினேன் என்றும் ஒப்புக் கொண்டதாக நகராட்சியில் பணிபுரியும் திருமதி சுனந்தினியின் கணவர் திரு சதீஸ் கண்ணன் எழுதச் சொல்லி அக்கடிதங்களை நகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பும்படி சொன்னதாகவும் விசாரணையின் போது குறிப்பிட்டார். மேலும், திரு சரவணன் என்பவர் ஆணையாளராக இருக்கும் பொழுது பணியாளர்களுடைய இருக்கைகள் மாற்றம் செய்யப்பட்டன என்றும், இருக்கைகள் மாற்றம் செய்யப்பட்டதில் பணியாளர்களுக்குள் பகைமை ஏற்படுத்தியுள்ளது என்றும், அதில் திருமதி சுனந்தினி என்பவருடைய கணவர் புகார் எழுதியுள்ளார் என்றும் திருமதி சுனந்தினி மற்றும் கணக்காளர் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு புகார் மனுக்களை அனுப்பியுள்ளார்கள் என்றும் தான் இந்த அலுவலகத்திற்கு வந்த கடந்த நான்கு மாத காலத்தில் திரு வெங்கடேசன் பெண்களிடம் தரக்குறைவாக நடந்து கொள்ளவில்லை என்றும், தற்பொழுது அலுவலகத்தில் பிரச்சினைகள் ஓரளவிற்கு குறைந்துள்ளன என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

4. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இராஜபாளையம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் தங்களுக்குள் இருக்கும் காழ்ப்புணர்ச்சி காரணமாக ஒருவர் மேல் ஒருவர் புகார் எழுதும் வழக்கத்தினை கொண்டுள்ளதாக அறிய முடிகிறது. நகராட்சி பணியாளர்கள் பொதுமக்களின் பிரச்சினைகளில் கவனம், செலுத்துவதைத் தவிர்த்து ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுவதையே வாடிக்கையாக கொண்டுள்ளனர். எனவே, இராஜபாளையம் நகராட்சிப் பணியாளர்களின் இதுபோன்ற செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன் பொதுமக்களுக்கான பிரச்சினைகளில் அர்ப்பணிப்புடன்

செயல்படும் வகையில் பணியாளர்களின் பணியமைப்பில் சில நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமென இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, பணியாளர்களின் நிர்வாகத் திறமையை / சேவைப் மனப்பாண்மையினை மேம்படுத்தும் வகையில் திருநெல்வேலி, நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநரின் கருத்தினைப் பெற்று உரிய சீர்திருத்த நடவடிக்கையினை மேற்கொள்ள பரிசீலிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டுக்கெகள்ளலாம் என முடிவு செய்து அவ்வாறே பரிந்துரை செய்யப்படுகிறது.

**2019**–ஆம் ஆண்டு, மே திங்கள், **23**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

சென்னை–600 032

பெறுநர்

1. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சாந்தோம் நெடுஞ்சாலை,
   சென்னை – 600 028.

2. **நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்,**
   **திருநெல்வேலி மண்டலம்,**
   **திருநெல்வேலி மாவட்டம்.**

3. **நகராட்சி ஆணையர்,**
   **இராஜபாளையம் நகராட்சி,**
   **இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**